**மாந்தை கிழக்கு பிரதேச சபை - 2023**
**-----------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாந்தை கிழக்கு பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 172(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாந்தை கிழக்கு பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலானது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுத்துவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா

எனவும் அதன் முறைமைகள் வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்படுகளின் பிரகாரம் எனது அறிக்கையின் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் உள்ளூர் அபிவிருத்தி உதவித்திட்டத்தின் மூலம் சபைக்கு வழங்கப்பட்டிருந்த நிதியளிப்பு கூட்டுமொத்தம் ரூபா 9,916,895 மீளாய்வாண்டிற்கான சபையின் நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டு வரப்பட்டிருக்காது முற்றாக விடுபட்டிருந்தது. | இவ்வாண்டு நிதிக்கூற்றுக்களுக்குள் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | நிதிக்கூற்றுக்கள் சீராக தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | வேலைகள் பூர்த்தியாக்கப்படாத நிர்மாண வேலைக்குரிய ரூபா 1,550,000 தொகையான மதீப்பீட்டுக் கிரயம் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | வேலை முடிவுற்ற கொடுப்பனவு சிட்டை கிடைத்ததும் அத்தொகை சீர் செய்யப்படும் | -மேற்படி- |

**1.7 இணங்காமை**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதியும் 01/2020 ஆம் இலக்கமும் கொண்ட திருத்தப்பட்ட நிதி ஒழுங்கு விதி 371(2) இன் பந்தி (ஆ) | பதவி நிலைத்தரத்திலல்லாத 09 அலுவலர்களுக்கு மீளாய்வாண்டில் 13 சந்தர்ப்பங்களில் ரூபா 317,251 நிமித்த உப கட்டு நிதி வழங்கப்பட்டிருந்தன. | பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சட்ட விதிகளின் பிரகாரம், நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணம் 571(1),(2),(3) | 04 மீளளிக்கத்தக்க கேள்வி வைப்புக்கள் மற்றும் 04 சமுதாய அடிப்படையிலான ஒப்பந்த நிறுவனங்களுக்கு மீளளிக்கப்பட்டிருக்க வேண்டிய ரூபா 202,107 பிடிபண வைப்புக்கள் என்பன கடந்த 01 தொடக்கம் 02 ஆண்டுகளாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிடிபண வைப்புக்கள் விடுவித்தலுக்கான நடவடிக்கை எடுக்கப்பட்:டுள்ளது | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம், நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 10,319,206 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 10,179,237 ஆகும்.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பாக தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | 2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரியும் வரியும் | - | 4,000 | 4,000 | - | - | - | - | - |
| (ii) வாடகை | 540,000 | 624,870 | 620,850 | 220,582 | 665,000 | 550,934 | 479,434 | 216,562 |
| (iii) உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 165,000 | 253,800 | 253,800 | - | 290,000 | 274,876 | 274,876 | - |
| (iv) ஏனைய வருமானம் | 23,479,000 | 24,104,182 | 35,148,958 | 12,297,000 | 16,527,000 | 19,438,101 | 3,875,277 | 23,342,595 |
| கூட்டுத் தொகை | **24,184,000** | **24,986,852** | **36,027,608** | **12,518,401** | **17,482,000** | **20,263,911** | **4,629,587** | **23,559,157** |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாண்டிலும் நேர் முன்னைய ஆண்டுகளுக்குரியவைகளாகவும் 42 தரப்பினர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த கூட்டுமொத்தம் ரூபா 1,057,124 பெறுமதியான கடை வாடகை மற்றும் தண்ட விதிப்புக்கள், சந்தைக் குத்தகைக் கட்டணம், கனரக வாகன சேவைகளுக்கான வாடகை கட்டணம் என்பன அறவிடப்பட்டிருக்காது கடந்த 01 தொடக்கம் 11 ஆண்டுகளாக தொடர்ந்தும் நிலுவைகளாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. அத்துடன் 01 ஆண்டுக்கு மேலாக அறவிட வேண்டிய முத்திரைத் தீர்வைக் கட்டணம் கூட்டு மொத்தம் ரூபா 329,330 ஆகும். | பதிவழிப்புச் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது முன்னைய ஆண்டுக்கான கனரக வாகன வாடகை நிலுவை தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்தல் வழங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | வருமானங்களை தாமதமின்றி சேகரிக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டு சபை நிதியிலிருந்து கூட்டுமொத்தம் ரூபா 802,515 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த காந்தி ஜி | வேலைகளை பூரணப்படுத்த 2024 ஆம் ஆண்டு நிதியில் ஒதுக்கப்ப்டுள்ளது | புனரமைப்பு வேலைகள் உரியவாறு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சன சமூக நிலைய புனரமைப்பு வேலைகள் உரியவாறு வேலை மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் நாளது வரை வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்காது குறித்த திட்டத்தின் மூலம் பிரதேச பொது மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க எதிர்பார்க்கபட்ட நலன்புரி சேவையினை கடந்த 02 ஆண்டுகளாகப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | குத்தகை அடிப்படையிலும் வாடகை அடிப்படையிலும் வழங்கப்படுவதற்காக பொன்னகர் மற்றும் பாண்டியன்குளம் / நட்டாங்கண்டல் ஆகிய பிரதேசங்களில் அமைக்கப்பட்டிருந்த சந்தைகள் மற்றும் அதன் கடைத்தொகுதிகள் என்பன கடந்த 01 தொடக்கம் 05 ஆண்டுகளாகச் செயற்பாடற்று விடப்பட்டிருந்ததுடன் இதன் பெறுமதியும் மதிக்கப்பட்டிருக்கவில்லை. | பத்திரிகைகளில் விளம்பரம் செய்தும் கடைகளை எடுப்பதற்கு யாரும் முன்வரவில்லை. | சொத்துக்கள் பயன்பாடின்றி வைக்கப்படாதிருத்தல் வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை நிதி மற்றும் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை என்பவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா 53,481,480 பெறுமதியான பல்வேறுபட்ட கட்டட அமைப்புக்கள் மற்றும் 18 பொதுக்கிணறுகள் புனரமைப்பு வேலைகள் கிரயம் கூட்டுமொத்தம் ரூபா 3,190,628 என்பன சபைக்குரித்தற்ற காணியில் அமைக்கப்பட்டடிருந்த போதிலும் அவற்றினை சபைக்குரியதாக்க நாளதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் தரப்படவில்லை | சபைக்குரிதாக்குவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

## 4. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### 4.1 சுற்றாடல் பிரடச்சனை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திண்மக்கழிவுகள் அவற்றின் தன்மைக்கேற்ப உரியவாறு தரம் பிரிக்கப்பட்டு சேகரிக்கப்பட்டிருக்காது எடுத்துச் செல்லப்பட்டு நட்டாங்கண்டல் எனுமிடத்திலுள்ள பாதுகாப்பு வேலிகளற்ற கழிவகற்றல் இடத்தில் குவிக்கப்படுவதனால் பல்வேறு விலங்குகளினால் இக் கழிவுகள் சாப்பிடப்பட்டு அவற்றின் பாகங்கள் சுற்றயல் பகுதிகளில் சிதறப்பட்டு காணப்பட்டிருந்தன. | இறுதிக் கழிவகற்றல் இடத்தைச் சுற்றி வேலி அடைப்பதற்கும் கழிவுகளை தரம் பிரிப்பதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன | உக்ககூடிய கழிவுகளை சேதனப்பசளை உற்பத்திக்கு அல்லது மாற்று பயன்பாட்டுக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |